---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக்கூற்றுக்கள், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் மொத்த வருமானங்களும் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நிதிய முதலீடு செய்ப்பட்டதால் மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 907,271 ஆன வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் | நிலையான வைப்புகளுக்காக வட்டி பெறுவனவுகளை கணக்கீடு செய்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை 2:27:1:b இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் முதிர்வடைந்த திகதியில் கிடைக்கும் வட்டி கணக்கீடு | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஆண்டிற்குரிய வருமானம் இனங் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் என்பன அபறுமானத்தினால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | செய்யப்பட்டுள்ளதாக | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 14 பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் உருப்படி மற்றும் எதிர்கால நலன்கள் அல்லது சேவை தேவைப்பாடு உருவாகும் போது அல்லது கிரயத்தை நியாயமாக அளவிடக்கூடிய சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள 28 ஏக்கர் அளவிலான காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 77,872,750 தொகை 2017 ஆம் ஆண்டு முதல் காணியின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக அதில் ரூபா 16,500,000 தொகை மூலதன முற்பணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 61,372,750 தொகை கணக்கீடு செய்யப்படாதன் காரணமாக காணியின் பெறுமதி ரூபா 77,872,750 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 1999 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் உடமை கொண்டு வரும் 22 ஏக்கர் காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ பீடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் உரித்து தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதால் ரூபா 61,840,513 தொகை இதுவரை கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக 2016 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்தின் வருடாந்த கணக்குக் கூற்றுக்களில் 2.26 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது . | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒன்றுக்கொன்று வேறு வகையான சொத்துக்கள் வகுப்புக்கள் வெவ்வேறாக காண்பிக்கப்படாமல் பல்கலைக்கழகத்தின் ரூபா 38,175,522 ஆன வீதி முறைமை காணியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது | நிலையான சொத்துக்கள் வகைப்படுத்தல் தொடர்பாக விநியோகிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 649 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வீதி தொடர்பாக சொத்து வகுப்பு ஒன்று பெரிடப்படாதிருந்ததால் 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற 71 வது கணக்காய்வு குழு கூட்டத்தின் போது காணி மற்றும் வீதிகள் என்பவற்றை ஒரே சொத்துக்கள் வகுப்பில் காண்பிப்பதற்கும் காணி | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்கள் இனங் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் வீதிகளை காலக்கழிவு செய்யாமல் இருப்பதற்கும் கணக்கிட்டு கொள்கையாக இறுதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதால் வீதிகளின் பெறுமதி காணிகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 8 இன் 19(ஆ) பந்தியின் பிரகாரம் பொருட்களோ அல்லது சேவையொன்றை பெற்றுக் கொண்டிருந்த போதும் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யாத, பட்டியலிடப்படாத அல்லது வழங்குனருடன் முறையான இணக்கப்பாடு ஒன்றில்லாத செலவினங்கள் செலுத்த வேண்டிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களின் பிணைமுறி பெறுமதியை அறிவிடுவதற்காக 2004 ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கொன்று 2022 நவம்பர் 25 ஆம் திகதி அளவில் முடிவடைந்திருந்த போதும் வழக்குக்குரிய சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய தொகையை மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | இவ்வழக்கு 2022 நவம்பர் 25 ஆம் திகதி முடிவடைந்து இருந்த போதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இவ்வழக்கிற்குரிய பட்டியலை இன்னும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி இருக்காததால் அது செலுத்த வேண்டிய செலவொன்றாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படவில்லை என்பதாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | காணி கையேற்றல் சட்டத்தின் 38 (அ) உப கட்டளையின் கீழ் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் மருத்துவ பீடம் அமைந்துள்ள காணியின் உரித்தினை பொறுப்பேற்கப்பட்ட நாள் முதல் 7 சதவீதமான வருடாந்த வட்டி ஒன்று 2017 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 77,872,750 தொகைக்கு மேலதிகமாக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அண்ணளவாக ரூபா 35,432,101 தொகை காணி உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய போதிலும்இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் அதற்காக நிதி கூற்றுகளில் சீராக்கம் செய்யப்பட்டு இருக்கவில்லை | இக்காணியின் உரித்து தொடர்பாக குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தில் காணப்படும் வழக்கு முடிவடையாமல் இருப்பதால் இதற்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 8 இன் 100 பந்தியில் | ரூபா 150 மில்லியன் இழப்பீடாக அனைத்து | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தில் சேவை புரிந்து கட்டாய விடுமுறை அனுப்பப்பட்டுள்ள விரிவுரையாளர் ஒருவரினால் ரூபா 150 மில்லியன் இழப்பீட்டுத் தொகை கோரி பல்கலைக்கழகம் உட்பட 25 தரப்பினரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு 2019 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட தற்போது விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு தொடர்பாக நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தரப்பிலும் இருந்தே கோரப்பட்டுள்ளதாகவும், அதன் பிரகாரம் வழக்குத் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர் இந்த 150 மில்லியன் மில்லியன் தொகையை பல்கலைக்கழகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக வெளிப்படுத்தினால் இந்த வழக்கின் மொத்த பெறுமதியையும் பல்கலைக்கழகத்தால் போலியாக கொடுப்பினவு செய்வதற்கு உள்ள கடப்பாடக இருப்பதால் அனைத்து வழக்கு நடவடிக்கைகளும் முடிவடையும் வரை இவ்வழக்குக்காக திட்டமிட்டமாக செலுத்த வேண்டிய தொகையை இனங்கான முடியாது என்பதாகவும் | நியமங்களுக்கு இணங்க நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாவாண்டில் கிடைத்திருந்த ரூபா 736,471,987 ஆன மூலதன மானியங்கள், நன்கொடைகள் மற்றும் ஏனைய மூலதனத் தன்மையிலான பெறுவனவுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதி கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் குறித்த நியமத்தின் பிரகாரம் மூலதன மானியங்கள், நன்கொடைகள் மற்றும் ஏனைய மூலதன மானியங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதி கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாவர விஞ்ஞான மற்றும் நில அலங்காரக் கற்கை பிரிவினும் ஆய்வுக்கூடத்திற்காக 2022 நவம்பரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 19,515,924 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பன கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஒப்பந்தம் தொடர்பாக இறுதி பட்டியல் கொடுப்பனவிற்கான பட்டியல் தகவல் எங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அதை அடிப்படையாகக் கொண்டு 2023 J V மூலம் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதாக | நடைமுறை அல்லா சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி அதற்கு இணங்க கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் I ஆம் பந்தி | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணிரின் வருகை மற்றும் வெளியேறல்களை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,039,705,068 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொதுவான நடைமுறையாக பல்கலைக்கழக முறைமையில் உள்ள கல்விசார் பதவியணியினரால் கைவிரல் அடையாளத்தின் மூலம் அல்லது வேறொரு வகையில் வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்யாத போதும் அனைத்து கல்வி மற்றும் நிர்வாக கடமைகளை தயங்காமல் நிறைவேற்றதாகவும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக் கான தாபன விதிக் கோவையின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | | | |
| (i) | 2 மற்றும் 4.5 ஆம் பந்தி | சுயநிதியிடல் செயற்பாடுகள் பூச்சிய அடிப்படையில் பேணி செல்லப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 18 சுயநிதியிடல் உழைப்பு செயற்பாடுகளுக்குரியதாக கிடைத்திருந்த வருமானத்தில் ரூபா 126,452,295 தொகை நிலையான வாய்ப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | பாடநெறி அபிவிருத்தி நிதியத்தில் காணப்பட்ட மீதிகள் முதலீடு செய்யப்பட்டதாக | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பந்தி 5.1.6 | சுயநிதியிடல் உழைப்பு செயற்பாடுகளின் மொத்த வருமானத்தில் 0.01 ஆன நிதி ஏற்பாட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு | இப்பங்களிப்பினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை என | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கவில்லை. | | |
| (iii) | பந்தி 5.2.3 | சுயநிதியிட செயற்பாட்டுக்காக மறைமுகமாக தொடர்படும் உத்தியோகத்தர்களு மொத்த மறைமுக கிரயத்தில் கூடியது 10 சதவீதம் வரையே கொடுப்பனவு செய்ய முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் பல்கலைக் கழகத்தில் 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரை செயற்படுத்தப் பட்டிருந்த 93 சுயநிதி உழைப்பு செயற்பாடுகளின் ஆகக்கூடிய எல்லையை மிகைத்து ரூபா 35,459,271 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதாக | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பந்தி 5.3 | அபிவிருத்தி செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்களிப்புத் தொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரை பல்கலைக்கழகத்தால் செயற்படுத்தப்பட்ட சுயநிதி உழைப்பு செயற்பாடுகளில் இருந்து 5.2.1 மற்றும் 5.2.2 இன் கீழ் அபிவிருத்தி செலவின விடயங்களுக்கு ரூபா 6,276,882 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரையிலும் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை அவ்வாறே சுயநிதியிடல் உழைப்பு செயற்பாடுகளிலிருந்து 5.1.4 இன் கீழ் அபிவிருத்தி செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2022 யூன் 10 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள், ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | ஓய்வு பெற்ற, உத்தியோகத்தர்களை, மீண்டும், சேவையில் ஈடுபடுத்துதல், குறித்த சுற்றறிக்கையின் மூலம் நிறுத்தப்பட்டிருக்கையில் அதற்கு இணங்காத வகையில், ஒப்பந்த அடிப்படையில், 2022 மே முதல் உத்தியோகத்தில் ஒருவர், ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2023 சனவரி வரை மொத்தம் ரூபா 800,000 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று நிர்வாக உத்தியோகத்தரான, உப வேந்தரின் அலுவலக நடவடிக்கைகளை, மிகவும் சிறப்பாக பேணிச் செல்ல வேண்டியுள்ளதால், உபவேந்தரின் பிரத்தியேக செயலாளர், ஓய்வு பெற்றதன் பின்னர், சேவை நீடிப்பொன்றை வழங்குவதற்கு, நேர்ந்ததாகவும், எவ்வாறாயினும், 2023.02.09 ஆந் திகதி முதல், அந்த உத்தியோகத்தின், சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க, நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | அரச செலவினங்களை கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், உள்நாட்டு நிதியங்கள் மூலம், மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு கல்விச் சுற்றுலா மற்றும் பயிற்சிகள் நிறுத்தப்பட வேண்டுமென, ஆலோசனை வழங்கப்பட்டிருக்கையில், பல்கலைக்கழகத்தின், 05 பதவியணியினருக்காக, 2022 மே முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான, காலப்பகுதியில், விமான டிக்கட் கொள்வனவுக்காக, ரூபா, 2,631,800 தொகை செலவிடப்பட்டிருந்தது | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரால், UGC/DA-F/Bond violation இன் கீழ் 2022.11.09 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த கடிதத்தின் மூலம், பிணைமுறிகளை மீறும், பதவியணியினரால் செலுத்தப்படுகின்ற, தொகையிலிருந்து, கல்வி, விடுமுறை விடுமுறை பெறுகின்றது, கல்விசார் பதவியணியினருக்கும் ஏழு வருட விடுமுறையைப், பெற்றுக் கொள்ளும் பதவியணியினருக்கும் விமான டிக்கட்களை கொள்வனவு | வெளிநாட்டு கல்வி, சுற்றுலா மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக உள்நாட்டு நிதியங்கள் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்வதற்கு தேவையான, நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேலும், கல்வி அமைச்சின் ர்நு.ஃருனு.ஃ01.ஃடுநவ வநசள-01 ஆம் இலக்க மற்றும் 20.04.2023 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பிணை முறி மீறல் நிதியத்திலிருந்து ஏழு வருட கல்வி விடுமுறை மற்றும் கல்வி கல்வி விடுமுறை பெற்றுக் கொண்டோருக்கு ரூபா 750,000 என்ற அடிப்படையில் விமான டிக்கட்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் கிடைத்திருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 198,176,461 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 53,983,044 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 144,193,417 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு சம்பளம் மற்றும் படிகள், பெறுமானத்தேய்வு மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மற்றும் வழங்கல்களின் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகந்துர பிரதேசத்தின் 711 பேர்ச் அளவிலான 08 வயல் காணிகளை பல்கலைக் கழகத்திற்கு கையளிக்கும், நடவடிக்கைகள், 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, மீளாய்வாண்டு இறுதி வரையில், 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும், அவ் வயல் காணிகளை கையேற்பதற்கு, நடவடிக்கை | இக்காணிக் கையேற்பிற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, | குறித்த காணியை பல்கலைக்கழகத்திற்கு, கையேற்பதற்கு, நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. | | |
| (ஆ) | சவூதி அரசின், கடன் தொகை ஒன்றின் பேரில், கல்வி அமைச்சினால், செயற்படுத்தப் படுகின்ற நகர அபிவிருத்தி செயற்திட்ட அலுவலகம், 2021 ஆம் ஆண்டு முதல், பல்கலைக்கழகத்தினுள், நடாத்திச் செல்வதற்காக இட வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதும், அதற்காக, பல்கலைக்கழகம் மற்றும் நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இடையே, உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்படாதிருந்ததுடன், அலுவலக இடவசதிகளை வழங்குவதற்காக, செயற் திட்டத்திடமிருநது வாடகையொன்றை அறவிடுவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட அலுவலகம், நேரடி கண்காணிப்பொன்றின் கீழ் பேணிச் செல்லும் நோக்கில், பல்கலைக்கழகத்தின் கட்டிடம் ஒன்றில், பராமரித்து செல்லப்படுவதுடன், இக்கட்டிடம் அரசின் நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்டிருந்த தால் வாடகையொன்றை, பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு, தீர்மானிக்கப்பட்டது. மேலும், சவுதி அபிவிருத்தி மன்றத்தின் கீழ், கிடைக்கும் நிதி, பல்கலைக்கழகத்தின், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம், வழங்குவதால், பொது திறைசேரியின் பணம், பல்கலைக்கழகத்தின், ஆதனம் ஒன்றுக்காக, வாடகையாக கொடுப்பனவு செய்வதற்காக பயன் படுத்தப்படாததுடன் 2023.03.28 ஆந் திகதி கூடிய செயற் திட்டத்திற்குரிய நிர்வாக குழுவினாலும் அவ்வாறு கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ள முடியாதென தீர்மானித்ததாக | பல்கலைக்கழகத்திற் குரிய வளங்களை பயன்படுத்துவதற்கா க குறித்த தரப்பின உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு, வாடகை மற்றும் கட்டணங்கள் அறவிடுவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| - | | |
| ரூபா 17,828,424 பெறுமதியான, 03 மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு பெறுகை, செயற்பாட்டின் போது, அரசின் பெறுகை வழிகாட்டல், கோவையின் 2.6.1 (ஆ), 2.12(அ) | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். எதிர்காலத்தில், பெறுகை வழிகாட்டல் | பெறுகை நடவடிக்கைகள், முறையாக திட்டமிடப்பட்டு, அரசின் பெறுகை, |

| | | |
|---|---|---|
| மற்றும், 4.2.2 (ஆ) பந்திகளின், தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படாமல், இருந்ததுடன், கேள்வி, கையேற்கும், திகதி மாற்றப்பட்டு, 02 சந்தர்ப்பங்களில், 03 பத்திரிகை விளம்பரங்கள் வீதம், 06 வியாபார விளம்பரங்கள், வெளியிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், பெறுகை, முறையாக திட்டமிடாமை காரணமாக, பத்திரிகை அறிவித்தல் வெளியிடுவதற்காக, ரூபா 130,086 ஆன மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. | கோவையின், பந்திகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படும் முதலாவது பத்திரிகை அறிவித்தலில், கேள்வி வழங்குதல் மற்றும் திறக்கும் நேரங்கள், ஒன்றுக்கொன்று முரண்பட்டதால், இரண்டாவது முறை, விளம்பரப்படுத்த நேர்ந்ததுடன், கொவிட் 19 காரணமாக, நாடு மூடப்பட்டிருந்தமையால், கேள்வி திறக்கும் திகதி திருத்தம் செய்யப்பட்டு, மூன்றாவது பத்திரிகை அறிவித்தலையும், செய்வதற்கு நேர்ந்தது. | வழிகாட்டல் கோவையின், ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 மூலதன விடயங்களின் கீழ் கிடைத்திருந்த நிதிஏற்பாடுகளை விஞ்சி ரூபா 40,268,238 கூட்டத்தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. | மாகந்துர விடுதி நிர்மாண செயற்திட்டத்தின் ம் v மற்றும் vi கட்டங்களிற்காக 2022 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத நிதியங்களைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக தேவையான நிதி ஏற்பாடு 2023 ஆம் ஆண்டில் திறைசேரி நிதி ஏற்பாட்டு மூலம் ஒதுக்கீடு செய்துள்ளதாக | நிதியத்தை தாபிக்கும் நோக்கத்திற்கு முரணாக செலவினங்களை மேற்கொள்வதற்கு முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |